# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.43/2020**
**PW8**

| | | |
|---|---|---|
| Name | : | ஆனந்தன் |
| Father's Name | : | ராஜேந்திரன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.07.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது தண்டராம்பட்டு வட்டம் , கொட்டையூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். கடந்த 25.04. 2018 அன்று தரடாப்பட்டு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அன்று காலை 7 மணிக்கு என் அலுவலகத்தில் நானும் என் உதவியாளர் சுப்பிரமணியும் பணியில் இருந்தோம் . அப்போது ஜெயபால் த.பெ. நாராயணன் என்று தன்னை அறிமுகம் செய்துகொண்ட ஒருவர் எங்கள் அலுவகத்திற்கு வந்து அவர் சொந்தஊர் கண்ணகந்தல் மோட்டுர் என்றும் , நிலத்தகராறில் சின்னப்பையன் மகன் ராஜி என்பவரை கொலை செய்துவிட்டதாக சொன்னார். ஊரில் இருந்தால் என்னைஉறவினர்களும், போலிசும் பிடித்து அடித்து விடுவார்கள் என்றும் அதனால் , என்னிடம் வந்ததாக சொன்னார் . நான் அவர்கொடுத்த ஸ்டேட்மெண்டை பதிவு செய்துகொண்டேன் . தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஸ்டேட்மெண்ட் தான் எதிரி சொல்ல

சொல்ல நான் எழுதியது. அது **அ.சா.ஆ.2.** ஆஜர் எதிரிதான் அந்த நபர். அதன் பின்னர் நான் அவரை சாத்தனூர் டேம் போலிஸ் ஸ்டேசனுக்கு அழைத்து சென்று ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் . ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார். எதிரியையும் விசாரித்து வாக்குமூலம் பெற்றார் . எதிரி நடந்ததை சொன்னார். அந்த வாக்குமூலத்தில் கொலைசெய்ய பயன்படுத்திய இரும்பு ராடு மற்றும் கொடுவா ஆகியவற்றை நெடுங்காவடி கிராமம் , பனைமர சாலையில் பதுக்கி வைத்திருப்பதாகவும், அங்கு வந்து கைப்பற்றி கொள்ளலாம் என்று சொன்னதை பதிவு செய்து கொண்டார்கள் . அந்த வாக்குமூலத்தில் நானும் , என் உதவியாளர் சுப்பிரமணியும் கையொப்பம் செய்தோம் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 3**. அதன் பின்னர் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டேன். அதன்பிறகு என்ன நடந்தது என்று சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி , அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிஸ் விசாரணையில் கடந்த 25.04.2018 அன்று காலை 7 மணியவில் நானும் என் உதவியாளர் சுப்பிரமணி என்பவரும் பணியில் இருந்தபோது நெடுங்காவடியை சேர்ந்த நாராயணன் மகன் ஜெயபால் என்பவர் என்னிடம் ஆஜராகி கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்துகொண்டு அந்த வாக்குமூலத்தில் ஆஜர்எதிரியை அழைத்துக்கொண்டு மேல்செங்கம் காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றும் , அங்கு ஆய்வாளர் எங்களையும் ஆஜர்எதிரியையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் , அதில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம் என்றும், எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் கண்ணக்கந்தல் ரோட்டில் உள்ள தனஞ்செழியன் நிலத்திற்கு சென்றோம் என்றும் , நெடுங்காவடி கிராமம் பனஞ்சோலை முட்புதர் அருகே சென்றோம் என்றும் , அங்கு ஆஜர் எதிரி மறைத்து வைத்திருந்த சுமார் 62 செ.மீ நீளமுள்ள நடுப்பகுதி 11 செ.மீ சுற்றளவு உள்ள தலைப்பகுதியில் ஒட்ட வைத்த பைப்பின் நீளம் சுற்றளவு 22 செ.மீ உள்ள இரும்பு பைப்பினை எடுத்து ஆஜர் செய்தார் என்றும் , அதே பகுதியில் இருந்து கொடுவா கத்தி நுனிப்பகுதி கூர்மையாகவும் , அடிப்பகுதி மரப்பிடி பொருத்தப்பட்டுள்ளது என்றும், கொடுவாவின் மொத்த நீளம் 38 செ.மீ அதன் மரப்பிடி 10 செ.மீ அளவும், அதன் சுற்றளவு 7.5 செ.மீ ஆகவும், அந்த கொடுவாவின் இரும்பு பகுதியின் நீளம் 26

செ.மீ ஆகவும், நடுப்பகுதி அகலம் 5.5 செ.மீ அளவுள்ள ரத்தக்காயம் படிந்த கொடுவா கத்தியை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், ஆஜர் எதிரி அங்கு மறைத்து வைத்திருந்த ரத்தகரை படிந்த கோடு போட்டலைட் ப்ளு கலர்லுங்கி ஒன்றையும் எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்ள ன்றும் , அதில் நானும் என் உதவியார் சுப்பிரமணியும் கையொப்பம் இட்டோம் என்றும் , போலிசாரிடம் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் 25.04.2018 அன்று எதிரி என் அலுவலகத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரி தான் ராஜி என்பவரை கொலை செய்துவிட்டதாக எந்த ஸ்டேட்மெண்டும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரியை நான் காவல் நிலையத்தில் ஆஜர்படுத்தவில்லைஎன்று சொன்னால் சரியல்ல . நான் சொல்வதுபோல் எதிரி காவல் நிலையத்தில் ஆய்வாளரிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . சாத்தனூர் டேம் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் தயார் செய்துவைத்திருந்த ஆவணங்களில் நான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் விசாரணைக்கு அழைத்தார்களா என்றால் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றபிறகு விசாரிக்கவில்லை . நான் இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு ஒருநாள் மட்டும்தான் சென்றேன் . நான் சென்ற அன்று ஆய்வாளர் சொன்னவாறு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.